10.10.19 EVERWIN MATRIC.HR.SEC.SCHOOL

Std: X MATERIAL OF THE MONTH October

TAMIL

இயல் - 5

1. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவதை _______ என்கிறார் மணவை முஸ்தபா. (மொழிபெயர்ப்பு)
2. மொழிபெயர்த்தல் என்ற தொடரை தொல்காப்பியர் ________ இயலில் குறிப்பிட்டுள்ளார். (மரபியல்)
3. சங்ககாலத்தில் தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதை ________ செப்பேட்டுக் குறிப்பு புலப்படுத்துகிறது. (சின்னமனூர்ச்)
4. வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட காப்பியத்திற்குச் சான்று _______ (கம்பராமாயணம், வில்லிபாரதம்)
5. ‘மொகு சாஸ்ட்டு’ என்ற ஜப்பான் மொழியின் பொருள் __________ (விடைதர அவகாசம் வேண்டும்)
6. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகமானவர்________. (ஷேக்ஸ்பியர்)
7. _______ நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. (18 ஆம்)
8. மொழிபெயர்ப்பால் _______ நூல் உலக மொழிகளுக்குரியதாக மாறியது. (திருக்குறள்)
9. இரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கவிதை ____. (கீதாஞ்சலி)
10. ஆங்கில மொழியில் மொழிபெயர்த்த கீதாஞ்சலி கவிதைக்கு ______ பரிசு கிடைத்தது. (நோபல் பரிசு)
11. வடம் என்பதன் பொருள் _______. (கயிறு)
12. பாதாளச் சாக்கடை என்பதன் சரியான சொல் ________ (புதைசாக்கடை)
13. Tele என்பது __________ யைக் குறிக்கிறது. (தொலை)
14. ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளில் இருந்து ______ நூல்கள் வரை மொழிபெயர்க்கப்படுகின்றன. (5000 நூல்கள்)
15. கருத்துகளைப் பகிர்வதால் மொழிபெயர்ப்பை _______ என்று குறிப்பிடுகிறோம். (பயன்கலை)
16. “சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்று ______ கூறினார். (பாரதியார்)
17. சதம் என்றால் _______ என்று பொருள் (நூறு)
18. திருவிளையாடற் புராணத்தின் ஆசிரியர் _______ (பரஞ்சோதி முனிவர்)
19. திருவிளையாடற் புராணத்தில் குறிப்பிடும் பாண்டிய நாட்டு மன்னன் _______ (குசேலபாண்டியன்)
20. கபிலரின் நண்பர் ______. (இடைக்காடனார்)
21. பரஞ்சோதிமுனிவர் பிறந்த ஊர் ______. (திருமறைக்காடு)
22. மொழிபெயர்ப்பின் மூலம் பெற்றிருக்கக் கூடிய கொள்கை ________ (இலக்கியத் திறனாய்வு)
23. ______ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை மொழிப்பெயர்ப்பு பணிகளில் ஈடுபட வேண்டும். (ஹார்வர்ட்)
24. ‘ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும்’ என்று கூறியவர் ______ (திருவள்ளுவர்)
25. சதாவதானி என்று பாராட்டுப் பெற்றவர் ________ செய்குதம்பிப் பாவலர்)
26. ‘கற்றவர் வழி அரசு செல்லும்’ என்று கூறுவது _______. (சங்க இலக்கியம்)
27. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ______ அன்பு வைத்தவர் ________ (மன்னன், இறைவன்)
28. திருவிளையாடற்புராணம் _______ படலங்களின் எண்ணிக்கை. (64)
29. மோசிகீரனார் முரசுக் கட்டிலில் கண்ணயரக் காரணம் _______. (அரசன் இல்லாமையால்)
30. வேப்பமாலை அணிந்த மன்னன் ______ (பாண்டியன்)
31. அரசரும், புலவரும் ______ வீசுவர். (கவரி)
32. குசேல பாண்டியன் என்னும் மன்னன் ______ புலமையில் சிறந்து விளங்கினான். (தமிழ்)
33. சொல்லின் வடிவாக இறைவனின் இடப்புறம் வீற்றிருப்பவள்____ (பார்வதி)
34. கடம்பவனத்தை விட்டு ஒரு போதும் நீங்க மாட்டோம் என்று கூறியவர் ________. (இறைவன்)
35. பரஞ்சோதி முனிவர் _______ பக்தி மிக்கவர். (சிவ)
36. திருவிளையாடற் கதைகள் _______ முதற் கொண்டு கூறப்பட்டு வருகிறது. (சிலப்பதிகாரம்)
37. இடைக்காடனாரின் சொல் ______ போல் இறைவனின் திருச் செவியில் சென்று தைத்தது. (வேற்படை)
38. தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது_______. (அறியாவினா)
39. மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை_____. (ஏவல் விடை)
40. பிறருக்குப் பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது _______. (கொடைவினா)
41. வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவது _______. (உறுவது கூறல் விடை)
42. ஆடத் தெரியுமா என்ற வினாவிற்குப் பாடத் தெரியும் என்று கூறுவது _____. (இனமொழி விடை)
43. இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா? என்று வினவுவது ________. (ஐயவினா)
44. வினா________ வகைப்படும். (ஆறு)
45. மாணவன் ஆசிரியரிடம் இப்பாடலின் பொருள் யாது என வினவுவது _______. (அறியாவினா)
46. விடை _______ வகைப்படும். (எட்டு)
47. பொருள்கோள் _______ வகைப்படும். (எட்டு)
48. செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்கு ______ என்று பெயர். (பொருள்கோள்)
49. பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது ______. (ஆற்றுநீர்ப் பொருள் கோள்)
50. நிரல்நிறைப் பொருள்கோள் _______ வகைப்படும். (இரண்டு)

இயல் - 6

1. கரகாட்டத்தின் வேறுபெயர் ______ (கும்பாட்டம், குடக்கூத்து)
2. நெகிழிப் பைகளால் ______ வளம் குன்றுகிறது. (மண்ணின்)
3. மரங்களின் மீது நெகிழிப் பைகள் சிக்கிக் கொள்வதால்
   ________ முழுமையாக நடைபெற முடியவில்லை. (ஒளிச்சேர்க்கை)
4. தேரோட்டத்தில் ______ கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டும்
   என்பது மரபு. (எட்டு முதல் பதின்மூன்று)
5. கரகாட்டத்திற்கு இசைக்கப்படும் இசைக்கருவிகள் _______ ஆகும்.
   (தவில்)
6. “நீரற வறியாக் கரகத்து” என்ற பாடலடியில் கரகம் என்ற சொல்
   இடம் பெறும் நூல் _______. (புறநானூறு)
7. கரகாட்டத்தின் துணையாட்டம் _______ (மயிலாட்டம்)
8. இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில்
   சுமந்து ஆடுவது _______. (காவடியாட்டம்)
9. தேவராட்டம் என்பது _______ மட்டுமே ஆடும் ஆட்டம். (ஆண்கள்)
10. தேவதுந்துபி என்னும் இசைக்கருவி பயன்படுத்தும் ஆட்ட வகை _______
    (மயிலாட்டம்)
11. தப்பு என்பது _______. (தோற்கருவி)
12. பறை என்று அழைக்கப்படும் ஆட்டம் _______. (துப்பாட்டம்)
13. மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடும் நூல் ______. (திருக்குறள்)
14. பூத்தொடுத்தல் என்னும் கவிதையில் பூவை என்ற சொல் _______
    குறிக்கிறது. (பெண்ணைக்)
15. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழை இயற்றியவர் _______ (குமரகுருபரர்)
16. செங்கீரைப் பருவம் பிள்ளைத் தமிழில் _______பருவம். (இரண்டாம்)
17. சிற்றிலக்கியங்களின் வகைகள் _______. (96)
18. பிள்ளைத் தமிழில் இடம் பெறும் பருவங்கள் _______. (10)
19. காற்றில் ஆடுவது போன்று மிகவும் மென்மையாகக் குழந்தை ஆடும்
    பருவம் ________. (செங்கீரை)
20. கிண்கிணி என்ற அணிகலன் அணியும் இடம் ______. (கால்)
21. குமரகுருபரர் எவ்விறைவனை செங்கீரை ஆடுமாறு வேண்டுகிறார்?
    (வைத்தியநாத முருகன்)
22. ‘சிறு பண்டி சரிந்தாடப்’ என்பதில் ‘பண்டி’ என்பதன் பொருள் ______.
    (வயிறு)
23. ‘கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்’ என்று பெருமைப்படுபவர் _______.
    (பாரதியார்)
24. கம்பர் பிறந்த நாடு ______. (சோழநாடு)
25. ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல பாயும் நதியாகப்
    பாலகாண்டத்தில் குறிப்பிடப்படுவது_______. (சரயு)
26. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது _______ (கார்காலம்)

27. குறிஞ்சியின் நிலப்பகுதி _____. (மலையும் மலைசார்ந்த இடமும்)
28. பொழுது _______ வகைப்படும். (இரு)
29. இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை உள்ள சிறுபொழுது ___. (யாமம்)
30. நண்பகல் ______ திணைக்குரிய சிறுபொழுது. (பாலை)
31. விளரியாழ் _______ திணைக்குரியது. (நெய்தல்)
32. எற்பாடு _____ பிரித்து எழுதுக. (எல் + பாடு)
33. சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்ற புலவர் ______. (கம்பர்)
34. கம்பர் இராமாயணத்திற்கு இட்ட பெயர் _______. (இராமவதாரம்)
35. விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் ______ (ஒட்டக்கூத்தர்)